# பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

O.S. No.143–2016 Date : 04–08–2023
பெயர் : பரமசிவம் வாசா 2

1) இவ்வழக்கில் நான் எழுதியதாக சொல்லப்படும் உயில் ஆவணத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் எந்த பதிவுகள் அடிப்படையில் இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் மார்ச் மாதம் 1ம் தேதி 2001–ம் ஆண்டு நான் எழுதிய உயில் ஆவணம் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எதன் அடிப்படையில் மேற்படி உயில் ஆவணத்தின் குறிப்பிட்டதாக சொல்லப்படும் தேதியை சொல்கிறீர்கள் என்றால் இந்நீதிமன்றத்தில் உயில் ஆவணத்தின் சான்று நகலை பார்த்ததன் அடிப்படையில் சொல்கிறேன். மேற்படி உயில் ஆவணத்தின் பத்திர எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தரப்பில் உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகலை என்னிடம் காண்பித்தார்கள். உயில் ஆவணம் அசலில் எத்தனை தாள்கள் கொண்ட அவணமாக எழுதப்பட்டது என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எவ்வளவு ரூபாய் முத்திரை தாளில் மேற்படி உயில் எழுதப்பட்டது என்றால் உயில் ஆவணம் முத்திரை தாளில் எழுதப்படாது. பச்சைத்தாளில்தான் எழுதப்படும். மேற்படி உயில் எழுதிய நபர் உயில் ஆவணத்தில் எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் ஒவ்வொரு தாளிலும் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார்.

2) கந்தசாமி உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு மூல ஆவணம் பற்றி உயில் ஆவணத்தில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அதுபோல் குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. பட்டாவின் அடிப்படையில் அந்த ஆவணத்தை எழுதினேன். கந்தசாமி மேற்படி உயில் ஆவணம் எழுதும்போது அவருக்கு அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து எவ்வாறு கிடைத்தது என்று சொன்னாரா என்றால் அவருக்கு பூர்வீகமாக அனுபவம் செய்து வந்ததாக சொன்னார். நான் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் மேற்படி உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் மற்றும் அசலின் ஒளி நகல் ஆவணத்தை பார்த்துதான் சாட்சியம் அளித்துள்ளேன். அசலின் ஒளி நகலில் ஆவணத்தில் எத்தனை தாள்கள் பார்த்தீர்கள் என்றால் அதனை நான் பார்க்கவில்லை. மேற்படி அசலின் ஒளி நகல் ஆவணத்தை என்னை முதல் விசாரணை செய்யும்போது நான் பார்த்தேன்.

3) மேற்படி உயில் ஆவணத்தில் யாருடைய ஜீவதிசைக்கு பின்பு உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அடைய வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கந்தசாமி மூப்பர் என்பவருக்கு பிறகு அடைய வேண்டிது என குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு யாருடைய ஜீவதிசைக்கு அடைய வேண்டியது என குறிப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. கந்தசாமி மூப்பர் என்பவரிடமிருந்து சொத்துக்கள் தொடர்பான முன் ஆவணங்களை வாங்கி பார்த்தீர்களா என்றால் அவர் சிட்டாவின் பட்டா எண் ஆவணம் பார்த்து எழுதினேன். மேற்படி உயில் ஆவணத்தில் கந்தசாமி மூப்பர் கொடுத்த சிட்டாவின் பட்டா என்னை குறிப்பிட்டுள்ளீரா என்றால் தற்போது எனக்கு அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் முன் ஆவணம் மற்றும் பட்டா எண் பற்றிய விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் கந்தசாமி மூப்பர் அதில் குறிப்பிட்டுள்ள சொத்துககள் எதன் அடிப்படையில் கிடைக்கப்பட்டது என்று தெளிவாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C P MULLAI VANAN

Digitally signed by C P MULLAI VANAN
Date: 2023.08.09 17:32:35 -0200